DEPOSITION OF WITNESS
(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.219/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | குமார் (PW.13 ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of July 2026

(2வது எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை –**

நான் தற்போது மதுரை வட்டார தடயவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணியாற்றி கடந்த ஏப்ரல் 2020ம் வருடம் பணிஓய்வு பெற்றுவிட்டு தற்போது கோயமுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் மதுரை வட்டார தடயவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியாற்றியபோது விருதுநகர் மாவட்ட குற்ற எண்.4/12 வழக்கு தொடர்புடைய ஆவணங்கள் விருதுநகர் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திலிருந்து எங்களது ஆய்வகத்திற்கு அனுப்பட்டு அவை 22.06.2012ம் தேதியன்று பெறப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட ஆவணங்களில் மாதிரி கையொப்பங்களுக்கு S 1 to S 17 வரையும் மற்றும்

கேள்விக்குரிய கையொப்பங்களுக்கு Q1 , Q2 எனவும் குறியீடுகள் கொடுக்கப்பட்டது. இந்த கையொப்பங்கள் அனைத்தும் மிகவும் கவனமாக கையொழுத்து குணாதிசய ஒப்பீடு அடிப்படிடையில் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்காணும் முடிவுக்கு வரப்பட்டது.

2. S 1 to S 17 வரையுள்ள மாதிரி கையொப்பங்களை போட்ட நபர் Q1 , Q2 ஆகிய கேள்விக்குரிய கையொப்பங்களை போட்டுள்ளார். இந்த முடிவு மற்றும் முடிவுக்கான காரணத்தாள் அடங்கிய ஆவண ஆய்வறிக்கை 09.07.2012ம் தேதியிட்ட Doc.No.97/12 என்ற அறிக்கை விருதுநகர் நீதித்துறை நடுவர் எண். 2 அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. **(அந்த ஆய்வு அறிக்கை மற்றும் அதற்கான காரணத்தாள் அசாஆ13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. அறிக்கை தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**(2வது எதிரி ஆஜர். 2வது எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது).**

சாட்சியால் காணொளி வாயிலாக நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.